விநியோகம் செய்யப்பட்டதா என்பதற்கும் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த 3 மாத காலத்தில் கிடைத்த சீனி என்ன ஆனது? அது இன்றைக்கும் நமக்குத் தெரியாத ஒன்றாக இருக்கிறது.

ஆகவே தான் நாங்கள் கொடுத்த குற்றச்சாட்டில் நம்பர் 31—இம்மாதிரி 1 கோடி பெருமான சீனி ஸ்டாக் பற்றியது ஒன்றாகும். அதற்குப் பதில் "அந்தச் சீனியை விநியோகிப்பதற்கு நாங்கள் சில ஹோல்சேல் வியாபாரிகளை எதிர்பார்த்தோம். அந்த நேரத்தில் சாதாரணமாக லெவி சர்க்கரை விலை 2 ரூபாய் என்றால் அந்த 2 ரூபாய்க்கே வெளிமார்க்கெட்டில் சர்க்கரை நிறையக் கிடைத்துக் கொண்டிருந்த காரணத்தினால், யாரும் நம்மிடம் இருந்த சர்க்கரையை லிப்ட் பண்ண முன்வரவில்லை. இரண்டு பேர்கள் தான் முன்வந்தார் கள். அவர்கள் மூலமாக லிப்ட் பண்ணினோம்" என்று சொன்னார்கள். இவர்கள் யார் யாரைக் கேட்டார்கள், எந்த இரண்டு பேர்கள் லிப்ட் பண்ண முன்வந்தார்கள் என்கிற விவரம் எதுவும் சட்டமன்றத்திற்குத் தெரியாது. எல்லோரும் முன்வரவில்லை என்றால் அப்படி முன்வந்த இந்த இரண்டு பேர்கள் யார்? இவர்கள் மட்டும் முன்வரக்காரணம் என்ன? பாரி அண்டு கம்பெனி முன்வந்ததாகத் தெரியவில்லை. அதன் மானேஜிங் டைரக்டர் எச். வி. ஆர். ஐயங்கார் ராஜினாமாச் செய்திருக்கிறார்கள். பாரி அண்டு கம்பெனி முன்வராமல் இருக்கிற சூழ்நிலை உருவாக்கப்பட்டதா? அதன் காரணத்தினால்தான் இவர் ராஜிநாமாச் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதா? இந்தக் கேள்வி கள் எல்லாம் மக்கள் மத்தியில் இருக்கின்றன. (மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் எழுந்திருந்தார்.)

THIRU K. T. K. THANGAMANI: Sir, let me continue my speech. I will come to it in greater detail later. I am now developing the point on the distribution ....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் கொடுக்கிற விளக்கம் அவர்களது விவாதத்திற்கு கூட உதவியாக இருக்கும். தங்கமணி அவர்கள் 1972 என்று சொன்னார்கள். அது 1972-ம் ஆண்டு அல்ல. 1970-ம் ஆண்டு 13-ம் தேதி பிப்ரவரி பாரி அண்டு கம்பெனியும் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்கவே இல்லை என்கிற விவரமும் சரியல்ல. பைலே இருக்கிறது. எச். வி. ஆர். ஐயங்கார் எப்போது ராஜீநாமச் செய்தார்கள் என்று பார்க்க வேண்டும். இதற்கு முன்பே செய்துவிட்டார்கள். இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.